**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.43/2021

பிரதிவாதி தரப்பு சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 11.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பி.வா.சா.1– துரைசாமி த/பெ சுப்புஉடையார்</u>**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. என்னுடைய தகப்பனார் பெயர் சுப்புஉடையார் என்றால் சரிதான். தாயார் பெயர் நாச்சாயம்மாள். சுப்புஉடையார், நாச்சாயம்மாள் இருவருக்கும் 3 பையன்கள் 1 பெண் 1. சுப்பிரமணியன், 2 துரைசாமி, 3 முருகன், பூங்கொடி என்ற பெண் உள்ளனர். சர்வே எண். 33 உள்ள 5 ஏக்கர் 90 செண்ட் ஆரம்பததில் எனது குடும்பத்திற்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தாயாருக்கு அவரது தாயார் 1 ஏக்கர் 97 செண்ட் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். எனது அப்பா மொத்தம் 4 ஏக்கர் கிரையம் வாங்கி விற்றுவிட்டார் அதன் பிறகு நானும் எனது அண்ணன் சுப்பிரமணியும் மறுகிரையம் வாங்கினோம்.

2. நாங்கள் அண்ணன் தம்பி பாகம் பிரித்துக்கொண்டோமா என்றால் இல்லை செட்டில்மெண்ட் எழுதிக்கொண்டோம். நாங்கள் பாகம் பிரித்துக்கொண்டதில் எனக்க கிழக்கேயும் எனது அண்ணன் சுப்பிரமணிக்கு மேற்கேயும் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 33/2 கிழக்கே 1 ஏக்கர் 13 1/2 செண்ட் எனக்கு உள்ளது. சுப்பிரமணிக்கு சர்வே எண். 33/1 மற்றும் 33/2ல் மேற்குப்பக்கம் உள்ளது. நானும் சுப்பிரமணியனும் முருகன் என்பவருக்கு 2010ல் கிரையம் கொடுத்தோம் என்றால் எனது அண்ணனின் இடத்தை கொடுத்தோம் அதில் நானும் கையொப்பம் செய்தேன்.

3. எனது அண்ணன் சர்வே எண். 33/1, 2ல் 1 ஏக்கர் 13 1/2 செண்ட் முருகனுக்கு கிரையம் கொடுத்தார். நான்கெல்லையில் வடபுறம் மேல் பாதியில் ராமசாமி, கந்தசாமி, சங்கப்பிள்ளை நிலங்களுக்கு கிழக்கு, சர்வே எண். 33ல் கிழக்கிலிருந்து நேர் மேற்காக அமைக்கப்பட்டுள்ள 12 அடி அகலமுள்ள கிழமேல் பொதுப்பாதைக்கு தெற்கு சர்வே எண் 33ல் எங்களில் 2 இலக்கமிட்ட துரைசாமி பாக நிலத்திற்கு மேற்கு சர்வே எண். 34/1ல் பாரதி நிலத்திற்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. கிரையப்பத்திரத்தில் 1 ஏக்கர் 50 கட்டுப்பட்டது என்றால் சரிதான். பத்திரத்தில் கிழமேல் ரோட்டிலிருந்து கிரையம பெற்ற நிலத்திற்கு வருவதற்கு வாரி கரை வழியாக வருவதற்கு பாத்தியம் கொடுத்து பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு வாய்தா ஒத்தி வைக்கப்படுகிறது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.0?.12 11:06:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.